**Spl.SC.No. 19/2024** Dated:. 13.03.2026

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**அ.சா. 20 திரு. குருநாதன், ஆய்வாளர்**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் புகாரை பார்த்தேனா என்றால் பார்த்தேன். புகாரில் சம்பவம் நடந்த தேதி 29.01.2024 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் 31.01.2024ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் கொடுக்கப்பட்டபோது நான் காவல்நிலையத்தில்தான் இருந்தேன் என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுக்கப்பட்டது என்பதற்கு புகார்தாரரின் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரிதான். சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் புகார் பெறப்படவில்லை என்பதால்தான் முதல் தகவல் அறிக்கையின் நகல் புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணையை நான் 31.01.2024ம் தேதியே எடுத்துள்ளேன் என்றால் சரிதான். புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உடனேயே நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் இருட்டிவிட்டது என்பதால் செல்லவில்லை. புகாரில் சொல்லப்பட்டுள்ள சம்பவம் விரைந்து விசாரிக்கப்பட வேண்டியது என்றால் சரிதான். நான் சொன்னபடி இதுபோன்ற வழக்குகளில் நான் விரைந்து விசாரணையை தொடங்கியிருக்க வேண்டும் என்றும் வழக்கு கோப்பு எனக்கு தாமதமாக கொடுக்கப்பட்டது என்பதால்தான் உடனே சம்பவ இடத்திற்கு

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:17 +0530

செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் கமுதி காவல்நிலையத்தில் இருந்து சுமார் 15 கி.மீ தூரம் இருக்கிறது என்றால் சரியல்ல, 5 கி.மீ தூரத்தில்தான் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கமுதி அருப்புகோட்டை ரோட்டிற்கு தெற்கு பகுதியில் உள்ளதா என்றால் ஆமாம். சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் இடத்திற்கும் கமுதிஅருப்புகோட்டை ரோட்டிற்கும இடையே சுமார் 500 மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் 100 மீ தூரம் இருக்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காட்டுகருவேல் மரங்கள் அடர்ந்து வளர்ந்த புஞ்சை நிலம் என்றால் சரிதான். கமுதி–அருப்புக்கோட்டை ரோட்டிலிருந்து தெற்கு பக்கம் காட்டுக்கருவேல் மரங்கள் அடர்ந்து நிறைந்து உள்ளதால் அந்த பக்கம் யாரும் செல்லமுடியாது என்றால் சரியல்ல, இரு சக்கர வாகனம் செல்லும் அளவிற்கு மண் பாதை உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் உரிமையாளர் யார் என விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். விஎன் ஆர் என்பவருக்கு சொந்தமானது என தெரிந்துகொண்டேன். அந்த நபரை சாட்சியாக சேர்த்து விசாரித்து சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். விஎன்ஆர் என்பவருடைய நிலத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதால்தான் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும், பார்வை மகசர், வரைபடம் அங்கு வைத்து தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தில் நான் சொன்ன மணிபர்ஸ், ஆதார் அட்டை ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி பார்வை மகசர் , வரைடம் தயார் செய்து முடிப்பதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் அரை மணி நேரம்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:22 +0530

அதற்கு பின்பு நான் காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தபின்பு சாட்சிகளை எப்போது விசாரித்தேன் என்றால் பார்வை மகசர் சாட்சிகளை சம்பவ இடத்தில் வைத்தே விசாரித்தேன். அந்த இரு சாட்சிகளை விசாரித்து முடிப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகியிருக்கும் என்றால் சுமார் அரை மணி நேரம். விசாரித்து முடித்த பிறகு காவல்நிலையத்திற்கு வந்தேன் என்றால் இல்லை. இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்து புகார்தாரரை விசாரித்தேன். இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்து புகார்தாரரை விசாரித்தேன் என்றால் நேரம் ஞாபகமில்லை, ஆனால் அன்றைய தினமே விசாரித்தேன். சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசர், வரைபட சாட்சிகளை விசாரித்த பின்பு நான் காவல்நிலையத்திற்கு வந்து சாட்சி முருகவேலை விசாரித்தேன். சாட்சி முருகவேலை விசாரித்த பின்பு தான் நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்து புகார்தாரரை விசாரித்தேனா என்றால் ஆமாம். நான் 1ம் எதிரியை சந்தேகத்தின் பேரில் வாகன தணிக்கை செய்யும்போது கைது செய்யும்போதுதான் இந்த வழக்கு சம்பவம் பற்றி தெரியவந்தது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தில் இந்த எதிரிகள் தான் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பது எனக்கு எப்படி தெரியவந்தது என்றால் புகார் மனுவிலேயே புகார்தாரர் 1ம் எதிரியின் பெயரை குறிப்பிட்டுள்ளார். 2,3 எதிரிகளின் பெயர்கள் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1ம் எதிரியை நான் கஞ்சா வைத்திருந்தது சம்பந்தமாகத்தான் முதன் முதலில் கைது செய்தேன் என்றால் சரிதான். அவ்வாறு கைது செய்தபிறகு சட்டப்படி என்னென்ன நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமோ அந்த நடைமுறைகளை பின்பற்றி 1ம் எதிரி மீது கஞ்சா வழக்கு பதிவு செய்தேன்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:26 +0530

என்றால் சரிதான். கஞ்சா வழக்கு பதிவு செய்தபிறகுதான் இந்த வழக்கு சம்பவம் சம்பந்தமாக நான் விசாரித்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில், சொன்னஇடத்தில், நேரத்தில் வாகன தணிக்கை செய்யவில்லை என்றும் அப்போது நான் சொன்னபடி மூன்று எதிரிகளையும் கைது செய்யவில்லை என்றும் அவர்களிடமிருந்து வாகனம் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் 1,2 எதிரிகளை மட்டும்தான் அந்த இடத்தில் கைது செய்தேன் . நான் அந்த இடத்தில் 1,2 எதிரிகளையும் கைது செய்து வாகனத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எந்த எதிரிகளையும் கைது செய்யவில்லை என்பதால்தான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சொன்னபடி எந்த எதிரிகளிடமிருந்தும் கஞ்சாவை கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி கஞ்சா வழக்கில் 1ம் எதிரியை முதலில் விசாரித்து கைது செய்து என் பிடியில் வைத்திருந்தபோதுதான் இந்த வழக்கு சம்பவம் சம்பந்தமாக நானே ஒரு வாக்குமூலத்தை எழுதிக்கொண்டு 1ம் எதிரி கொடுத்தது போன்று கையெழுத்தை போட்டு ஒரு ஆவணத்தை உருவாக்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே சொன்னதுபோல் 1ம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், பணம் எதுவும் எடுத்து கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நீராவி கரிசல் குளம் ஊருக்கு பக்கத்தில் தான் அந்த ஊரின் சுடுகாடு உள்ளது என்றால் கொஞ்சம் தள்ளி உள்ளது. சுடுகாடு கமுதி –அருப்புகோட்டை செல்லும் ரோட்டிலிருந்து நீராவி கரிசல் குளம் வரும் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டில் பொதுமக்கள் சென்று வரக்கூடிய பரந்த வெளி என்றால் கிராம சாலை

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.13 18:37:30 +0530

என்பதால் அடிக்கடி பொதுமக்கள் சென்று வர வாய்ப்பில்லை. ஆனால் அந்த சாலையில் யார் எப்போது வேண்டுமானாலும் சென்று வரலாம் என்றால் சரிதான். நான் 1ம் எதிரியிடம் இருந்து கத்தியை கைப்பற்றியதாக சொல்லும் சமயத்தில் அந்த ஊர்க்காரர்களை சாட்சிகளாக வைத்து கைப்பற்றவில்லை என்றால் அந்த சமயத்தில் ஊர்க்காரர்கள் யாரும் இல்லை என்பதால் என்னுடன் வந்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து பெற்றேன். 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் போன் யாருக்கு சொந்தானது என கண்டறிய முயற்சி செய்தேனா என்றால் அந்த சமயத்தில் 1ம் எதிரி தனது தம்பி அலெக்ஸ்பாண்டியனுக்கு சொந்தமானது என்று சொன்னார். பின்னிட்டு அந்த எண்ணிற்கு அழைப்பு விவரங்கள் பெறப்பட்டுள்ளது. 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் போன் அவருடைய தம்பி அலெக்ஸ்பாண்டியனுக்கு சொந்தமானது என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது சொல்லவில்லை , பின்னிட்டு சொன்னார். மின்னணு சாதனம் யாருடையது என்று எவர் சொன்னாலும் உண்மையில் அது யாருக்கு சொந்தமானது என்பதை விஞ்ஞான பூர்வமாக கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது புலன் விசாரணை அதிகாரியின் கடமை என்றால் சரிதான். அப்போது காலஅவகாசம் இல்லை என்பதால் பின்னிட்டு அதுசம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், நேரத்தில் 1ம் எதிரியிடம் இருந்து போன் எதுவும் கைப்பற்றப்படாத காரணத்தால்தான் யாருடையது என கண்டுபிடிக்க நான் முறையான விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:35 +0530

சொன்ன கத்தி, பணம், செல்போன் ஆகிய மூன்று இந்த வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தடய பொருட்களையும் வழக்கிற்காக நான் பின்னிட்டு தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன சாட்சிகள் யாரையும் சொன்ன தேதியில், விதத்தில் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எதிரிகளிடம் இருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், எந்த தடய பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 04.02.2024ம் தேதி 1ம் எதிரி ஆஜர் செய்த செல்போனில் இருந்ததாக சொல்லப்படும் வீடியோ பதிவை நகல் எடுக்க வேண்டும் என்றால் நான் முறையாக காவல் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் உள்ள தனிப்பிரிவிற்கு அனுப்பி அங்கு உள்ள நிபுணர் மூலம் நகல் எடுத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நகல் எடுப்பதற்கு நிபுணத்துவம் பெற்ற ஒருவரை வைத்து நகல் எடுக்கப்பட்டது. நான் நிபுணத்துவம் பெற்றதாக சொல்லும் ரகுமான் நிபுணத்துவம் பெற்றவர் என்பதற்கு ஆவணங்கள் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் கணினி மையம் வைத்துள்ளதால் நிபுணத்துவம் பெற்றுள்ளார். நான் சொன்ன மாதிரி ரகுமான் இந்த மாதிரி விசயங்களில் நிபுணத்துவம் பெற்றவர் இல்லை என்றால் சரியல்ல. நான் ரகுமானிடம் பென்டிரைவில் பதிவேற்றம் செய்து கொடுக்கும்படி கேட்டதால்தான் அவர் பதிவேற்றம் செய்துகொடுத்தார் என்றால் சரிதான். நான் ரகுமானிடம் பென்டிரைவில் பதிவேற்றம் செய்துகொடுக்கும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை, வாய்மொழியாக சொன்னேன். நான் ரகுமானிடம் எந்த மின்னணு சாதனத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்படுகிறதோ அந்த மின்னணு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:39 +0530

சாதனத்தின் பெயரையும் விவரங்களையும் எந்த மின்னணு சாதனத்திற்கு பதிவேற்றம் செய்யப்படுகிறதோ அதன் பெயரையும் சான்றிதழில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பென்டிரைவ் உண்மையானது அல்ல அசலும் அல்ல என்றால் சரியல்ல. அந்த பென்டிரைவில் என்ன உள்ளது என்பதை பரிசோதனை செய்து நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பரிசோதனை செய்து அந்த பென்டிரைவில் என்ன விவரம் உள்ளது என சான்றளித்துள்ளேனா என்றால் இல்லை, புலன் விசாரணை அதிகாரி என்ற முறையில் அதில் உள்ள விவரங்களை தெரிந்துகொண்டேன். அந்த சாதனத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். புலன் விசாரணை அதிகாரி என்ற முறையில் பென்டிரைவில் பதிவாகியுள்ள குரல் யாருடையது என்பதை தீர்மானிப்பதற்கு குரல் மாதிரி பரிசோதனை செய்ய வேண்டியது என் கடமை என்றால் சரிதான். ஆடியோ வீடியோவாக இருந்ததால் உடனே செய்யவில்லை. பின்னிட்டு செய்யப்பட்டது. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக ஒருவருடைய உருவம் போன்றும் குரல் போன்றும் மார்பிங் செய்யலாம் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு மார்பிங் செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதை உறுதி செய்ய தடய அறிவியல் நிபுணரின் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. பென்டிரைவை நான் வழக்கிற்காக நானே உருவாக்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நான் புலன் விசாரணை செய்ததாக சொல்லும் அளவில் நான் முறையாக புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் பின் யோசனை செய்து வேறு ஒரு வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் பிடித்து வைத்திருந்த மூன்று எதிரிகளையும் பின் யோசனை செய்து இந்த வழக்கில் சேர்த்துள்ளேன்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:44 +0530

என்றால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கமுதி காவல்நிலையத்தில் எந்த தேதியில் ஆய்வாளராக பொறுப்பேற்று எந்த தேதியில் பணி மாறுதல் பெற்றேன் என்றால் 23.06.2023 முதல் 06.09.2024 வரை. எனக்கு கமுதி வட்டாரத்தில் நிறைய உறவினர்கள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. கமுதி காவல்நிலையத்தில் நான் பணியில் இருக்கும்போது எந்த புகார் வந்தாலும் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட பிறகுதான் விசாரணை செய்வார்கள் என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாருக்கு சிஎஸ்ஆர் கொடுக்கப்பட்ட பின்பு என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட பிறகுதான் கொடுப்பார்கள் என்றால் கமுதி காவல்நிலையத்திற்கு நிலைய அதிகாரி உதவி ஆய்வாளர் என்பதால் எல்லா வழக்குகளிலும் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வருவதில்லை. முக்கியமான வழக்கு எனில் வட்ட காவல் ஆய்வாளர் என்ற முறையில் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வருவார்கள். கடந்த 30.01.2024ம் தேதி மதிவதனி என்பவரின் மகள் புஷ்பராகவி, வயது 14 என்பவரை காணவில்லை என அவர் கமுதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கமுதி காவல்நிலைய C.S.R.No.47/2024 கமுதி காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சிஎஸ்ஆரில் மதிவதனி என்ற பெண் தனது மகளை காணவில்லை என்றும் கண்டுபிடித்து தருமாறும் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிஎஸ்ஆரில் 8 காலம் உள்ளது என்றும் 6வது காலத்தில் மனுவின் தன்மை என்ற இடத்தில் மனுவின் தன்மைபற்றி

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:48 +0530

குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சிஎஸ்ஆரில் மனுவின் தன்மை என்ற காலத்தில் சிறுமியை காணவில்லை என்பதற்கு பதிலாக பக்கத்து வீட்டு நபருடன் சண்டை (Neighbour quarrel) என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மனு ரசீது **எ.சா.ஆ.1**. (அரசு தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு மதிவதனி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் என்றால் சரிதான். அந்த புகார் மனு **எ.சா.ஆ.2** (அரசு தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) . பொதுவாக ஒரு சிறுமியை காணவில்லை என புகார் கொடுத்தால் சிறுமிதானா என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்களை பார்வையிட்டுதான் அடுத்த கட்ட விசாரணையை மேற்கொள்வோம் என்றால் சரிதான். இந்த சிறுமி ஏற்கனவே காணாமல் போனதாக புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு என்னால் கண்டுபிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சிறுமியை நான் கண்டுபிடித்து ஒப்படைக்கும்போது 3ம் எதிரி சூர்யாவின் வீட்டிலிருந்துதான் மீட்டு கொண்டுவந்து சிறுமியின் பெற்றோரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் 3ம் எதிரி சூர்யா 18 வயதுக்கு கீழ் இருந்ததால் சிறுமியின் பெற்றோர்கள் கேட்டுக்கொண்டதனால் நான் வழக்கு பதிவு செய்து மேல்நடவடிக்கை எடுக்காமல் சுமூகமாக அந்த பிரச்சனையை கையாண்டேன் என்றால் சரியல்ல. ஒரு சிறுமி காணாமல் போனால் அதை தீவிர குற்றத்தன்மை கொண்டதாக எடுத்துக்கொள்வோம் என்றால் சரிதான். சிறுமி புஷ்பராகவி காணாமல் போனதாக புகார் கொடுக்கப்பட்டதால் ஆய்வாளர் என்ற முறையில் என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு என்னுடைய

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:54 +0530

அறிவுரையின்பேரில்தான் சிஎஸ்ஆர் கொடுக்கப்பட்டது என்றும் நான் அந்த புகாரை உதவி ஆய்வாளர் விசாரிக்க அறிவுறுத்தினேன் என்றால் சரியல்ல. பொதுவாக 14 வயது சிறுமி காணாமல் போனதாக புகார் கொடுக்கப்பட்டு சிஎஸ்ஆர் கொடுக்கப்பட்டால் 2 நாட்களுக்குள் கண்டுபிடிக்க இயலவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிடுவோம் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்ற முறையில் எனக்கு கீழ் பணிபுரியும் காவலர்கள் சட்டத்தை மீறி எதை செய்தாலும் அதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம் மூலம் கமுதி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சக்திவேல் கணேஷ் 7603810912 என்ற மொபைல்போனுக்குரிய IMEI எண்ணை குறிப்பிட்டு அந்த எண்ணுக்குரிய CDR Details கேட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அந்த கடிதம் **எ.சா.ஆ.3**. அந்த கடிதத்தில் உள்ள மொபைல் எண் 3ம் எதிரி சூர்யாவுக்குரியது என்றால் தெரியாது. அந்த மொபைல் எண்ணின் CDR Report பெற்று 3ம் எதிரி சூர்யாவையும் சிறுமி புஷ்பராகவியையும் எங்கள் காவல்நிலைய போலிசார் மதுரையில் இருந்து 02.02.2024ம் தேதி மீட்டு கமுதி காவல்நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சிறுமியின் தாயார் மதிவதனி எனக்கு உறவினர் என்பதாலும், சிறுமியின் குடும்பம் செல்வாக்குடைய பணக்கார குடும்பம் என்பதாலும் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் சிறுமியை மட்டும் பெற்றோர் வசம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரி சூர்யாவை விடுவிக்காமல் காவல்நிலையத்திலேயே வைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதன்பின்பு 03.02.2024ம் தேதி இவ்வழக்கு சம்பவத்திற்கு சம்பந்தம் இல்லாத 3ம் எதிரியை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:37:59 +0530

எதிரியாக சேர்த்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு முதல் தகவல் அறிக்கையில் காலம் 7 ல் பார்த்தால் அடையாளம் தெரிந்த பெயர் விலாசம் தெரியாத இரண்டு நபர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாசகத்தை நான் பயன்படுத்திக்கொண்டு அந்த இரண்டு நபர்களில் ஒருவர் 3 ம் எதிரி என நான் பொய்யாக வழக்கில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய காவல்நிலையத்தில் எங்களுடைய Custody ல் இருந்த 3 ம் எதிரியை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று மற்ற இரண்டு எதிரிகளுடன் இருந்ததாக ஆவணங்கள் ஜோடித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. 03.02.2024 ம் தேதி 3 ம் எதிரியை கமுதி பசும்பொன்னில் உள்ள வெள்ளைச்சாமி தேவர் நினைவு மண்டபம் அருகில் உள்ள ஊரணி அருகே வைத்து கைது செய்யும்போது அந்த இடத்தில் தனிநபர்கள் சாட்சியாக வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் 3 ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கத்தியை கைப்பற்றும்போது தயாரிக்கப்பட்ட மகசரிலும் அங்குள்ள நபர்களை வைத்து கைப்பற்றியதாக தயாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். பசும்பொன் கிராமத்தில் வெள்ளைச்சாமி நினைவு மண்டபத்தில் வேலைக்கு சென்று வந்தவர்களும் வயதானவர்களும் எப்போதும் ஓய்வெடுத்துகொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். ஆனால் 3 ம் எதிரியை நான் கைது செய்த சமயத்தில் அந்த இடத்தில் யாரும் இல்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் 3 ம் எதிரியை கைது செய்யவில்லை என்றும் அதனால்தான் அந்த இடத்தில் உள்ள தனிநபர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமோ, அத்தாட்சியோ தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. கமுதி கோட்டை மேட்டை சேர்ந்த

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.13 18:38:05 +0530

மதிவதனியின் மகள் புஷ்பராகவி மற்றும் 3ம் எதிரி சூர்யா இருவரும் விரும்பியதால் 3ம் எதிரி சூர்யா நல்ல படிப்போ பணபலம் இல்லாதவராக இருந்ததால் தனது மகள் புஷ்பராகவியின் எதிர்காலம் கருதி எதிரி சூர்யாவை பெரிய வழக்கில் சிக்க வைத்து சிறை சென்றால்தான் தனது மகளின் வாழ்க்கை நல்ல முறையில் அமையும் என்ற தனது எண்ணத்தினை என்னிடம் தெரிவித்து இருவரும் ஆலோசித்து அப்போது கமுதி காவல்நிலைய எல்லைக்குள் நடைபெற்ற கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கில் பெயர் தெரியாத நபர் என்று புகாரில் கொடுக்கப்பட்டிருந்ததை பயன்படுத்தி புஷ்பராகவியின் தாயார் மதிவதனியின் வேண்டுகோளை ஏற்று இந்த வழக்கில் 3ம் எதிரியை பொய்யாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1,3 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து மேற்கொண்டு குறுக்கு விசாரணை

2ம் எதிரி என்னிடம் நான் சொன்னதுபோல் சொன்ன தேதி, நேரம், இடத்தில் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 2ம் எதிரியிடமிருந்து எந்தவொரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.13 18:38:10 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)